கலை இலக்கியத் திங்களிதழ்

# கணையாழி

மலர் : 56 இதழ் : 11 பிப்ரவரி 2022 விலை ரூ.25/-



## தேவைப்படுகிறது செம்மொழித் தமிழ்!– ம.ரா.

# உள்ளடக்கம்


கட்டுரை

| | |
|---|---|
| மு. இராமசுவாமி | 06 |
| எஸ். சண்முகம் | 19 |
| வ.ந.கிரிதரன் | 34 |

சிறுகதை

| | |
|---|---|
| டாக்டர் கே கீதா<br>தமிழில்: ராஜி ரகுநாதன் | 12 |
| வாசுதேவன் அருணாசலம் | 26 |
| சிவக்குமார் KB | 42 |
| ஹமீது தம்பி | 64 |

குறுநாவல்

| | |
|---|---|
| கவிஜி | 50 |

கவிதை

| | |
|---|---|
| கார்த்திகா | 11 |
| சௌவி | 18 |
| பண்ணாரி சங்கர் | 23 |
| வத்ஸலா | 24 |
| செ. புனிதஜோதி | 25 |
| தி.கலையரசி | 33 |
| வலங்கைமான் நூர்தீன் | 40 |
| நேசன் மகதி | 41 |
| அகராதி | 62 |
| ஜி.சிவக்குமார் | 63 |
| ரகுநாத் வ | 68 |

கடைசிப் பக்கம்

| | |
|---|---|
| இந்திரா பார்த்தசாரதி | 69 |


**வணக்கம்**

கணையாழி தற்போது மின்னிதழாக மட்டும் வெளிவந்து கொண்டிருக்கிறது. அன்புகூர்ந்து **www.kanaiyazhi.com** அல்லது **magzter.com** பாருங்கள்..

அச்சு இதழாக வரும் வாய்ப்பு இப்போது இல்லை உங்கள் சந்தாவை மின்னிழுக்கானதாக மாற்றலாம் அல்லது மீதித் தொகையைத் திருப்பி அனுப்பலாம். உங்கள் விருப்பத்தைத் தெரியப்படுத்தி உதவுங்கள்.. நன்றி.



சிறுகதை
வாசுதேவன் அருணாசலம்

# ஒரு குவாட்டரும் அரை பிளேட் மட்டன் பிரியாணியும்

“என்ன படிக்கிறாய்?” என்று கேட்டபடி கட்டிலில் படுத்துப் படித்துக்கொண்டிருந்த சாரதாவின் அருகில் சென்றார் ஜனார்த்தனன். கைலியும் கையில்லா பனியனும், அவர் தூங்கும்போது மட்டுமே அவரை விட்டுப் பிரியும் விளிம்புச் சட்டமில்லா மூக்குக்கண்ணாடியும் அணிந்திருந்தார். சாரதா பதில் சொல்லுவதற்கு முன்பே அந்தப் புத்தகத்தை வாங்கிப் பார்த்தார். ஒரு கவிதைத் தொகுப்பு. அவள் வாசித்துக்கொண்டிருந்த கவிதையை மௌனமாக வாசிக்கத் தொடங்கினார். தனதருகில் படுத்துக்கொண்டே வாசியுங்கள் என்பதுபோல் சமிக்ஞை செய்தார் சாரதா. ஜனார்த்தனன் அதைப் புரிந்துகொண்டு அவளருகில் மெதுவாகச் சாய்ந்தார் கவிதையை வாசித்தபடி. சில வினாடிகள் கழித்து “இந்தக் கவிதை நன்றாக இருக்கிறதே” என்று அதை வாய்விட்டுச் சத்தமாக வாசித்தார். “கவிதை என்றால் இப்படி இருக்க வேண்டும். நானும்தான் எழுதுகிறேனே” என்றபடி அடுத்த கவிதையை வாசித்தார். “எப்படித்தான் இவர்களுக்கு மட்டும் வார்த்தைகள் வந்து விழுகின்றனவோ? பாலோ கொய்லோ சொல்லுவதுபோல வார்த்தைதான் கடவுளோ? கடவுளின் அனுக்கிரகம் இருக்க வேண்டும்” என்று சொல்லிக் கொண்டிருந்தார். மீண்டும் ஒரு கவிதையைச் சத்தமாக வாசிக்கத் தொடங்கினார். அவருடைய தோள்பட்டையில் திடீரென்று ஏற்பட்ட ஈரத்தை உணர்ந்து சட்டென்று எழுந்து என்னவென்று பார்த்தார். சாரதாவின் கண்களில் கண்ணீர் வடிந்தபடி இருந்தது. “என்னாயிற்று? உடம்பிற்கு எதுவும் முடியவில்லையா? பொறு! திவ்யாவைக் கூப்பிடுகிறேன்” என்று எழுந்து வீட்டின் சிறிய படுக்கையறையில் தன்னுடைய மேஜையில் எதையோ எழுதிக்கொண்டிருந்த கல்லூரியில் கணினி அறிவியல் முதுநிலை இரண்டாமாண்டு பயின்றுவரும் தனது மகள் திவ்யாவை அழைத்துவந்தார். இருவரும் சாரதா இருந்த அறைக்குள் வந்தனர். கையிலிருந்த கவிதைத் தொகுப்பை விரித்தபடியே கட்டிலில் வைத்துவிட்டு சாரதாவின் அருகில் மீண்டும் சென்றார். திவ்யாவும் அருகில் வந்தாள்.“என்ன ஆச்சுமா? ” என்றாள் திவ்யா. “ஒன்றுமில்லை” என்றார் சாரதா. “சொல்லு! தலை எதும் வலிக்குதா?

மாத்திரை ஏதாவது போடறயா?" என்றார் ஜனார்த்தனன். தலையை மட்டும் "வேண்டாம்" என்பது போல் ஆட்டினார் சாரதா. "அப்பாவிற்கு காலையில் மாத்திரை கொடுத்துட்டியா?" என்று திவ்யாவிடம் கண்களில் கண்ணீருடன் கேட்டார். "கொடுத்துவிட்டேனே!" என்றாள் திவ்யா. "நல்லாத்தான் இருந்தாள். இந்தக் கவிதைகளை வாசித்தேன். ஒரு மாதிரி ஆகிவிட்டாள்" என்றார் ஜனார்த்தனன். படுக்கையிலிருந்த அந்தக் கவிதைத் தொகுப்பை திவ்யா கையில் எடுத்தாள். "அதிலிருக்கும் கவிதைகள் அனைத்தும் அருமையாக இருக்கிறதாம். கவிதை என்றால் இப்படித்தான் எழுத வேண்டும் என்கிறாரடி" என்றார் சாரதா. அந்தக் கவிதைத் தொகுப்பை, திவ்யா மீண்டும் ஒருமுறை பார்த்தாள். திவ்யாவின் கண்களிலும் கண்ணீர் துளிர்க்க ஆரம்பித்தது.

ஜனார்த்தனன் உத்தமபாளையம் ஒருங்கிணைந்த நீதிமன்றத்தில் அரசு வழக்கறிஞராகப் பதினான்கு வருடங்கள் பணியாற்றி வருகிறார். அதற்குமுன் பெரியகுளத்தில் இருந்தார். வயது ஐம்பத்து ஏழு. அன்று ஒருநாள் மதிய வேலையில் நீதிமன்றத்திலிருந்து அம்மாபட்டியிலுள்ள தன்னுடைய வீட்டிற்குக் கிளம்பினார். சரியாக எட்டு கிலோமீட்டர்தான். ஆனால் வீடு போய்ச் சேரவில்லை. ஜனார்த்தனின் துணைவி சாரதா அவருடைய கைபேசிக்கு அழைத்தார். ஜனார்த்தனன்தான் பதிலளித்தார். சாரதா அதிர்ந்துபோனார். அப்படிப்பட்ட பதில். "யாருங்க?" என்றார் ஜனார்த்தனன். "ஏங்க? என்னாச்சு? நான்தாங்க.... சாரதா?" என்றாள் சாரதா. மௌனம் மட்டுமே பதிலாய் இருந்தது. ஜனார்த்தனனுக்கு என்ன ஆயிற்று என்பதைவிட அவருக்கு ஒருவருடைய உதவி உடனடியாகத் தேவைப்படுகிறது என்பதை மட்டும் புரிந்துகொண்டார் சாரதா. திவ்யாவை கைபேசியில் அழைத்தார். நடந்ததைச் சொன்னார். திவ்யா உத்தமபாளையம் கோம்பைரோட்டிலிருக்கும் கல்லூரியில் படித்து வருகிறாள். அம்மாபட்டியிலிருந்து கல்லூரிக்குத் தன்னுடைய இரு சக்கர வாகனத்திலேயே போய்வருவாள். "அப்பா கோர்ட்டுக்குப் போயிட்டு அங்கிருந்து கூப்பிடுகிறேன். பயப்படாதே! ஒன்றும் இருக்காது! நான் பார்த்துக்கொள்கிறேன்" என்று ஆறுதலாகவும் அமைதியாகவும் நம்பிக்கையோடும் சாரதாவிடம் சொன்னாள். அடுத்த நாற்பது நிமிடத்தில் திவ்யாவின் இரு சக்கர வாகனம் வீட்டுமுன் வந்து நின்றது. வண்டியிலிருந்து இறங்கிய ஜனார்த்தனனின் கையைப் பிடித்து வீட்டிற்குள் அழைத்துச் சென்றாள் திவ்யா. "என்னடி ஆயிற்று! எங்கே இருந்தார்?" என்று பதறினார் சாரதா. "அய்யனார் கோயிலுக்குப் பக்கத்திலேயே நின்றுகொண்டிருந்தார். கோர்ட்டிலிருந்து மதியமே கிளம்பிவிட்டாராம். கொஞ்சம் உடம்பைச் சுற்றிப் பார். எங்கேயும் அடி எதுவும் பட்டிருக்கிறதாவென்று! தலையையும் நல்லா பாரு! எதுவும் கீழே விழுந்துட்டாரானு தெரியவில்லை. வண்டிக்கு ஒன்றும் ஆகவில்லை. ஏதோ ஷாக் ஆனமாதிரிதான் இருக்கிறார்" என்றாள் திவ்யா. "அப்பா வண்டி எங்கே?" என்றாள் சாரதா. "அது அங்கேயே கோயிலில் இருக்கிறது. வா, போய் எடுத்துவிட்டு வந்துவிடுவோம்" என்றாள் திவ்யா. ஜனார்த்தனனுடைய இரு சக்கர வாகனமும் திவ்யாவின் இரு சக்கர வாகனமும் ஒரே மாடல்தான். ஹோண்டா ஆக்டிவா. கலர்தான் வேறுவேறு. வீட்டில் மூவருமே இரண்டில் ஏதாவது ஒரு வாகனத்தைப் பயன்படுத்திக்கொள்வார்கள். சாரதாவும் திவ்யாவும் அய்யனார் கோயிலுக்குச் சென்று அங்கே நின்றுகொண்டிருந்த ஜனார்த்தனனுடைய இரு சக்கர வாகனத்தை எடுத்து வந்தனர்.

அன்றிரவு சாரதாவிற்கு தூக்கம்

வரவில்லை. இரண்டு சப்பாத்தி மட்டுமே ஜனார்த்தனன் சாப்பிட்டுவிட்டு அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார். இரவு விளக்கு மட்டும் எரிந்து கொண்டிருந்தது. வெளிச்சம் அவ்வளவாக இல்லை. ஜனார்த்தனின் அருகிலேயே அமர்ந்து பார்த்துக் கொண்டிருந்தார் சாரதா. “என்ன ஆயிற்று? எதையும் பார்த்து பயந்துவிட்டாரோ? சரியாக அய்யனார் கோயிலில் இது நடந்திருக்கிறதே! நாளைக்கு அய்யனார் கோயில் சென்று ஒரு மாலை வாங்கி போட்டுவிட்டு வந்திடலாம்” என்று நினைத்துக் கொண்டிருந்தார். ஜனார்த்தனன் மெதுவாகத் திரும்பிப் படுத்தார். அப்போது சாரதா தூங்காமல் கண்விழித்து இருப்பதைக் கவனித்து சட்டென்று எழுந்தார். “என்ன ஆயிற்று சாரதா? ஏன்? தூக்கம் வரவில்லையா? தலைவலி எதுவுமா? வயிற்றுவலியா? வேண்டுமென்றால் வெளியே கொஞ்சநேரம் நடந்துவிட்டு வருவோமா? வா!” என்று எழுந்தார். அய்யனார் கோயிலுக்கு நாளைக்கு கட்டாயம் போய் வரவேண்டும் என்று உறுதிப்படுத்துவதாகவே ஜனார்த்தனின் பேச்சும் செய்கையும் இருந்ததாக சாரதா நினைத்தார். “சரி வாங்க! கொஞ்ச நேரம் வெளியில் இருப்போம்” என்று ஜனார்த்தனனை அழைத்துச் சென்றார். இருவரும் வீட்டு வாசல் முன்னிருக்கும் சிறிய வெட்டவெளியில் சிறிது நேரம் நடந்தார்கள். சாரதா வெதுவாக ஆரம்பித்தார் “ஏங்க! இன்னைக்கு மதியம் என்ன ஆயிற்று?” “இன்னைக்கு மதியமா? என்ன ஆயிற்று?” என்று ஜனார்த்தனன் சாரதாவிடம் கேட்டார். அந்தக் கேள்வியே சரியான பதிலாக சாரதாவிற்குத் தோன்றியது. எதுவும் பேசாமல் சிறிது நேரம் நடந்துவிட்டு உள்ளே சென்றனர். ஜனார்த்தனன் படுக்கையிலிருந்த தலையணையைச் சரிசெய்து கொண்டு தலையைச் சாய்த்தார். “சாரதா! ஒரு மாதிரியாக இருக்கிறாயே! என்ன ஆயிற்று?” என்றார். சில வினாடிகள் மௌனமாக இருந்துவிட்டு, “ஒன்றுமில்லீங்க. கொஞ்சம் தலைவலி! சரியாகிவிடும். நீங்க தூங்குங்க” என்றார். “மாத்திரை ஏதாவது போடு! போட்டுவிட்டுத் தூங்கு! என்று கூறிவிட்டு ஜனார்த்தனன் தூங்கிவிட்டார். சராதாவிற்கு என்ன செய்வதென்றுதெரியாமல் விடியட்டும் பார்த்துக் கொள்வோம் என்று முடிவுசெய்து படுக்கையில் சாய்ந்தார்.

மறுநாள் மாலை அய்யனார் கோயிலுக்கு சாரதா, ஜனார்த்தனன், திவ்யா மூவரும் கிளம்பினார்கள். அங்கே பூசாரி மாரிச்சாமி சந்தனச்சாந்து பூசிய மேனியோடு, விபூதி பூசிய நெற்றியோடு, பழைய இரண்டு ரூபாய் நாணயத்தின் அளவிற்கு சிவப்புக் குங்குமப்பொட்டோடு, மூன்று விதமான அளவில் உத்திராட்ச மாலைகளை கழுத்தில் அணிந்தும், கை மணிக்கட்டு இரண்டிலும் வண்ணவண்ணமாகக் கட்டப்பட்டக் கயிறுகளோடும், திறந்த மார்போடும், முறுக்கிய வெண்ணிற மீசையோடும், இடுப்பில் ஒரு சிறிய உடுக்கையோடும் அங்கிருந்தார். சாரதா கொண்டுவந்த மாலையை அய்யனாருக்கு அணிவித்து இடுப்பிலிருந்த உடுக்கையை எடுத்து உலுக்க ஆரம்பித்தார். பின்பு, தட்டில் சூடமேற்றிக் காட்டிவிட்டு, சூடத்தட்டில் விபூதியோடு வெளியே வந்தார். எரிந்துகொண்டிருந்த சூடத்தின் ஜுவாலையின் வாசனையைக் கவனமாக கைகளில் கவ்வி கண்களில் ஒற்றிக்கொண்டு, தட்டிலிருந்த விபூதியை மூவருக்கும் எடுத்து நெற்றியில் இட்டுக்கொண்டனர். ஜனார்த்தனன் பூசாரியின் சூடத்தட்டில் ஒரு நூறு ரூபாய் தாளைப் போட்டார். மாரிச்சாமி நூறு ரூபாய் தாளைப் பார்த்ததும் சற்று உடம்பு முன்னும் பின்னும் ஒரே இடத்தில் இருந்தபடி ஆட ஆரம்பித்தது. நாக்கை மடித்து கீழ்த்தாடையை இடதுவலதாக பலமுறை





ஆட்டி, கண்களை உருட்டி கையிலிருந்த உடுக்கையை உடம்பின் பலம் அத்தனையையும் கொண்டு உலுக்க ஆரம்பித்தார். உடம்பு எம்பி எம்பி குதித்தது. உலுக்கையின் சத்தமும் முதலில் ஒலித்த உலுக்கையின் சத்தத்தைவிட அதிகமாகவேயிருந்தது. நன்கு உரத்த குரலில் அடித்தொண்டையிலிருந்து, “மகாலிங்கம் மகன்தானே நீ!” என்றார் ஜனார்த்தனைப்பார்த்து. “ஆமாங்க சாமி” என்றாள் சாரதா ஜனார்த்தனன் பதில் சொல்லுவதற்குமுன். “உங்க அப்பா சாராயம் வேண்டும் என்று கேட்கிறார். கொண்டுவந்து கொடு. அப்பனை மறந்துவிட்டாயா?” என்றார் ஆவேசத்துடன். “இல்லீங்க சாமி.” “சாராயம் வாங்கி படைக்கச் சொல்லுகிறேன் சாமி” என்றார் சாரதா. “சாமி! குடும்பத்திற்கு ஏதாவது ஆபத்து இருக்கிறதுங்களா சாமி?” என்று பவ்யமாக வினவினார் சாரதா. சாரதாவின் பக்கம் திரும்பினார் பூசாரி (இப்போது அய்யனார்). “வடக்கிருந்து வருகிறது. உயிர் பலி கேட்கிறது. தாலி பத்திரம்!” என்றார். “என்ன செய்யட்டும் சாமி? என்றார் அப்பாவியாக சாரதா. “சாராயமும் கறிச்சோறும் வருகிற சனிக்கிழமை படையல் செய்துவிடு. விசேஷம்! அப்படியில்லை என்றால், அடுத்த சனிக்கிழமைக்குள் ஏதாவது ஒரு நாளில் வந்து செய்துவிடு. எல்லாம் சரியாகிவிடும். என்னைத் தாண்டி உன் புருஷன்மேலே கை வைத்துவிடுமா?” என்று ஆக்ரோஷமாகக் கத்தினார் அய்யனார். “எல்லாம் செய்துவிடுகிறேன் சாமி!” என்றார் சாரதா பவ்யமாக. “ஏன்டி, சாராயத்துக்கும் கறிச்சோறுக்கும் எங்கே போவது?” என்றார் ஜனார்த்தனன். “சாராயம் இல்லையென்றால், ஒரு குவாட்டரும் அரை பிளேட் மட்டன் பிரயாணியும் கொண்டுவா! போதும்!” என்றார் ஆடியபடியே அய்யனார். ஒருவழியாக ஆடி நின்று சுய நினைவுக்கு திரும்பியதுபோல் உடம்பை ஒரு சிலிர்ப்பு சிலிர்த்தார் பூசாரி மாரிச்சாமி. மூவரும் அவரது காலில் விழுந்து எழுந்தனா. பூசாரி தட்டிலிருந்த விபூதியை எடுத்து மூவரின் நெற்றியிலும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு இடத்தில் பூசிவிட்டார். பின் மூவரும் அங்கேயிருந்த ஆலமரத்திற்குச் சென்றனர். அங்கேயிருந்துதான் திவ்யா நேற்று ஜனார்த்தனனை வீட்டிற்கு அழைத்துவந்தார். அந்த ஆலமரத்தினடியிலிருந்த ஒரு சிமிண்ட்

இருக்கையில் மூவரும் அமர்ந்தனர். ஜனார்த்தனனுடைய முகம் சற்று இறுக்கமாக ஆரம்பித்தது. திவ்யா இதைக் கவனித்தாள். தன்னுடைய அம்மாவிற்கு சமிக்ஞை செய்தார். சாரதாவும் ஜனார்த்தனின் முகத்தைக் கவனித்தார். உடனடியாக அங்கிருந்து கிளம்புவதுதான் சரி என்பதுபோல, "வாங்க, கிளம்புவோம்" என்று எழுந்தார். மூவரும் வீடு வந்து சேர்ந்தனர். ஜனார்த்தனன் முகம் மாறவில்லை. ஒருவித பதற்றம் தெரிந்துகொண்டேயிருந்தது. "சாரதா! எனக்கு நேற்று ஏதோ நடந்திருக்கிறது" என்றார். சிறிது மௌனத்திற்குப்பின் சாரதா நடந்த அனைத்தையும் ஒன்றுவிடாமல் கூறினார். ஜனார்த்தனன் அதிர்ந்து போனார். எதுவும் பேசவில்லை. "சாரதா! நான் ஒரு நியூராலஜிஸ்டைப் பார்ப்பதுதான் நல்லது. தேனி அல்லது மதுரைக்குப் போவோம். யாரிடம் பார்ப்பது என்று விசாரித்துவிட்டு வருகிறேன். என்னுடைய பழைய சீனியர் மதுரையில்தான் இருக்கிறார். அவரைக் கேட்டால், எந்த மருத்துவரைப் பார்க்க வேண்டும் என்று தெளிவாகச் சொல்லிவிடுவார்" என்றார். "ஏங்க! அதுசரி! அப்படியே, அய்யனார் சொன்னதையும் செய்துவிடுவோம். அதுதான் நல்லது" என்றாள் சாரதா. சாரதாவை சற்று கோபமாகப் பார்த்தார். பின் அவர் முகம் மாறியது. "அது உன் விருப்பம். நீ செய்வது அய்யனாருக்கு இல்லை. அங்கிருந்த பூசாரிக்கு. சாராயமும் கறிச்சோறும் பூசாரி சாப்பிட்டு பல நாட்கள் ஆகிவிட்டது என்று நினைக்கிறேன். கொடு! எனக்கு ஒன்றுமில்லை. ஆனால் ஒன்று, இந்தச் சனிக்கிழமை வேண்டாம். மதுரை செல்லவேண்டியது வந்தாலும் வரும். ஆகையால் அடுத்த சனிக்கிழமை கட்டாயம் செய்துகொள்" என்றார். "அய்யனார் இந்த சனிக்கிழமைனுதான் சொன்னாருங்க" என்றார் சாரதா. "சாரதா! அது அய்யனார் சொன்னதில்லை... அந்த பூசாரி சொன்னது. அதெல்லாம் ஒன்றும் ஆகாது. அடுத்த சனிக்கிழமை எல்லாம் செய்வோம். அடுத்த சனிக்கிழமைக்குள் செய்துகொள்ளலாம் என்ற ஆப்ஷனையும் கொடுத்திருக்கிறாரே!" என்றார் ஜனார்த்தனன். சாரதாவிற்கு மேலும் அதைப்பற்றிப் பேசி வாதம் செய்யவேண்டாம் என்று தோன்றியதால், ஜனார்த்தனன் சொன்னதை ஏற்றுக்கொண்டார்.

சனிக்கிழமை மதுரை அப்பலோ மருத்துவமனையில் மருத்துவர் பாரதி சௌந்தரை பார்ப்பதற்கு ஜனார்த்தனன் ஏற்கனவே பதிவு செய்துவைத்திருந்தார். காலை ஒன்பது மணிக்கெல்லாம் சாரதாவுடன் ஜனார்த்தனன் மருத்துவனை வந்துசேர்ந்தார். மருத்துவரை சரியாக 11:30 மணிக்குப் பார்த்தனர். சாரதா நடந்த விஷயத்தை விரிவாகச் சொன்னார். மருத்துவர் அனைத்தையும் கேட்டுவிட்டு எம்.ஆர்.ஐ ஸ்கேன் எடுக்க பரிந்துரைத்தார். ஸ்கேன் முடித்து மருத்துவ அறிக்கை பெற்று மீண்டும் மருத்துவரைப் பார்க்க மாலை 06:30 மணியானது. மருத்துவர் பாரதி அறிக்கையைப் பார்த்துக் கொண்டிருந்தார். பின் தனது கைபேசியை எடுத்து யாரையோ அவர் அறைக்கு வரும்படி கூறினார். சில வினாடிகளில் மருத்துவர் ஜி.சி. நாயர் உள்ளே வந்தார். அவரும் அந்த அறிக்கைப் பார்த்தார். அல்ஸைமர்! அன்ஆம்பிகுயுவஸ்லி அல்ஸைமர்! ஸ்டார்ட் தி மெடிக்கேஷன் அஸ் ஏர்லி அஸ் பாஸிபில்!" என்று கூறிவிட்டு ஜனார்த்தனனையும் சாரதாவையும் பார்த்துக்கொண்டே அந்த அறையைவிட்டு வெளியேறினார். மருத்துவர் பாரதி, ஜனார்த்தனுக்கும் சாரதாவிற்கும் விளக்கிச் சொல்ல ஆரம்பத்தார். சிறிது நேரத்திற்குப்பின், "சுருக்கமாக... உங்களுக்கு எளிமையாக புரியவைப்பதற்காகக் கூறுகிறேன்... இது

ஒரு மறதி நோய்! கொஞ்சம் கொஞ்சமாக மூளையின் செயல்பாடுகள் ஒரு முடிவுக்கு வரும்! மருந்துகள் இருக்கின்றன! முழுவதுமாக குணப்படுத்துவது என்பது கடினம். ஆனால், இதை ஒரு நோயாகக் கருதாமல், ஒரு வகையான உடல்நிலைமாற்றமாகக் கருதி மருந்துகள் எடுத்து இதை சமாளித்துவரலாம். இத்தகைய நிலையில் உள்ளவர்கள் தொலைந்துபோவது மிகமிக சகஜம். ஆகையால் வீட்டினுடைய விலாசம் அடங்கிய அட்டையை, ஒரிரு தொலைபேசி எண்களை இவர்கள் வைத்திருப்பது மிகமிக அவசியம். இந்த நிலை ஒருவகையான ஃப்ளக்சுவேஷனில் இருக்கும். அதையறிந்து உடன் இருப்பவர்கள் இவர்களை கவனித்துக்கொள்ள வேண்டும்'' என்றார். மருத்துவர் சொல்லச் சொல்ல சாரதாவின் கண்களிலிருந்து கண்ணீர் சத்தமில்லாமல் வழிந்துகொண்டிருந்தது. மருத்துவரின் மருந்துச் சீட்டை வாங்கிக்கொண்டு பின்னர் எப்பொழுது வரவேண்டும் என்பதையும் உறுதி செய்துகொண்டு வெளியே வந்தனர். ஊர் வந்து சேர்ந்தனர். மூன்றுமணி நேர பயணத்தில் இருவரும் பேசிக்கொண்டது ஒரு சில வார்த்தைகள்தான். திவ்யா இரண்டு மூன்று முறை சாரதாவின் கைபேசிக்கு அழைத்திருந்தாள். "எல்லாம் வந்து சொல்லுகிறேன்'' என்று கூறி அழைப்பை சாரதா துண்டித்தாள். ஊர் வந்து சேர்ந்தார்கள்.

மறுநாள் காலை "ஏங்க ஒரு குவாட்டரும் அரை பிளேட் மட்டன் பிரியாணியும் வாங்கித் தருகிறீர்களா? அய்யனாருக்கு செலுத்திவிட்டு வந்திடலாம்'' என்றார் சாரதா. சாரதாவை கண்ணெடுக்காமல் பார்த்துக்கொண்டே நின்றார் ஜனார்த்தனன். "ஏங்க! என்னாச்சு?'' என்றாள். "ஒன்றுமில்லை. உன் நம்பிக்கையை நினைத்துதான்...'' என்றார். "யாருங்க அந்த அம்மா பாரதி சௌந்தர் அவுங்க என்ன கடவுளா... எல்லாத்தையும் நிர்ணயிக்க... நமக்கெல்லாம் மேல ஒருத்தர் இருக்கார். அவர் பார்த்துக்கொள்வார். நான் சொல்லுவதை மட்டும் கொஞ்சம் செய்யுங்க. மறந்திடாதிங்க!'' என்றார். "கட்டாயம் மறக்கமாட்டேன்'' என்றார் ஜனார்த்தனன். 'மறந்திடாதிங்க' என்ற வார்த்தையின் அர்த்தம் மாறிப்போனதை அப்போதுதான் சாரதா உணர்ந்தார். "மன்னித்துவிடுங்கள்'' இனி இந்த வார்த்தையை நான் பயன்படுத்தவே மாட்டேன்'' என்றாள். கண்களிலிருந்து கண்ணீர் கசிந்தது. திவ்யா அங்கே வந்தாள். "அப்பா! எதைப்பற்றியும் கவலைப்படாதீர்கள். நேற்று இரவு அம்மா எல்லாம் சொன்னாங்க. உங்களுக்கு பிடித்த விஷயங்களைத் தொடர்ந்து செய்யுங்க. நீங்கள்தான் நன்றாகக் கவிதை எழுதுவீர்களே! அதைத் தொடர்ந்து செய்யுங்கள். ஏற்கனவே நீங்கள் எழுதிய கவிதைகளை என்னிடம் தாருங்கள். அவைகளை பிரசுரிக்க நான் ஏற்பாடு செய்கிறேன். அப்பா! முதலில் இதைப்பற்றிக் கவலைப்படுவதை விடவேண்டும். நன்றாகத் தூங்குங்கள். நான் உங்களை கோர்ட்டில் விடுகிறேன். கல்லூரி விட்டு வரும்போது கூப்பிட்டுக்கொண்டு வந்துவிடுகிறேன். நீங்கள் எதற்கும் கவலைப்பட வேண்டாம். இன்னும் மூன்று வருடங்கள்தான். பின் கோர்ட்டிற்கும் செல்ல வேண்டியதில்லை. வீட்டிலிருங்கள் அம்மா இருக்காங்க! பார்த்துக்குவாங்க! நானிருக்கிறேன்! பார்த்துக்கொள்வேன். அந்த மருத்துவர் மிகச் சரியாகச் சொல்லியிருக்கிறார். இது நோயே அல்ல! ஒரு உடல்நிலை! அவ்வளவுதான்'' என்று முடித்தாள். சாரதாவிற்கு மிகப்பெரிய ஆறுதலாகவேயிருந்தது. ஜனார்த்தனனுக்கு மாற்றங்களை எவ்வாறு ஏற்றுக்கொள்ளப் போகிறோம் என்ற தயக்கம் மட்டும் மனதில் தங்கியிருந்தது.

திவ்யா சொன்னதுபோல் ஜனார்த்தனன் தனக்கு மிகவும் பிடித்த கவிதை எழுதுவதைத் தொடர்ந்தார். திவ்யாவின் உதவியோடும் நண்பர்களின் உதவியோடும் மூன்று கவிதைத் தொகுப்புகளை எழுதினார். மிகப் பிரபலமான பதிப்பகம் ஒன்று அனைத்துத் தொகுப்புகளையும் பிரசுரித்தது. நாட்கள் ஒருவாறு நகர்ந்து மூன்று ஆண்டுகள் கடந்தன. அன்று சாரதா படித்துக்கொண்டிருந்தது ஜனார்த்தனுடைய மூன்று கவிதைத் தொகுப்புகளில் ஒன்றுதான். தன்னுடைய எழுத்தையே தன்னால் உணரமுடியாத, தெரிந்து கொள்ளமுடியாத நிலைக்கு சென்றுகொண்டிருந்தார் ஜனார்த்தனன். ஆனால், அவரைப் பொறுத்தவரையில் நாட்கள் சந்தோஷமாகவே நகர்ந்து கொண்டிருந்தன. மருத்துவமனைக்குச் சென்றுவந்த நாளிலிருந்து அடுத்த இரண்டு வருடங்களுக்கு சனிக்கிழமைதோறும் ஒரு குவாட்டரும் அரை பிளேட் மட்டன் பிரியாணியும் அய்யனாருக்குப் படைப்பதை மட்டும் சாரதா நிறுத்தவேயில்லை. ஆனால், கடந்த ஒரு வருடமாக அய்யனார் கோவிலுக்குச் செல்லுவதையே சாரதா நிறுத்திவிட்டார். அய்யனார் மீதுதான கோபமா என்று தெரியவில்லை.

தன்னுடைய எழுத்தையே தன்னால் அறிந்துகொள்ள முடியாமல்போன ஜனார்த்தனனை நினைத்து சாரதாவும் திவ்யாவும் வருந்திக்கொண்டிருந்த அன்றுதான், வீட்டு வாசலில் “அம்மா! அம்மா!” என்று ஒரு வயதான மூதாட்டி அழைத்தபடி நின்றுகொண்டிருந்தார். குரல் கேட்டு திவ்யா வெளியே வந்தாள். “யாருங்க? என்ன வேண்டும்? என்றாள். “இங்கே மகாலிங்கம் மகன்..., சாரதா அம்மானு யாரும் இருக்காங்களா?” என்றார் அந்த மூதாட்டி. “ஆமாம். இருக்காங்க. என் அப்பா அம்மாதான். சொல்லுங்க! எதுக்குக் கேட்கறீங்க” என்றாள். “நான் அய்யனார் கோயில் பூசாரியோட சம்சாரங்க!” என்றார் அந்த மூதாட்டி. “பூசாரியோட ஒய்ஃப்பங்களா? பொறுங்க அம்மாவைக் கூப்பிடுகிறேன். உள்ளே வாங்க!” என்றபடி முன் வாயிலுக்கு வந்து கதவைத் திறந்துவிட்டாள். “அம்மா!” பூசாரியோட ஒய்ஃப் வந்திருக்காங்க” என்று தன் அம்மாவைக் கூப்பிட்டபடி வீட்டிற்குள் சென்றாள் திவ்யா. சிறிது நேரத்தில் சாரதாவும் திவ்யாவும் வெளியே வந்தார்கள். சாரதாவின் முகத்தில் ஒருவித பதற்றம் தொற்றியிருந்தது. “சொல்லுங்கம்மா! என்ன வேண்டும்?” என்றாள் சாரதா. “அம்மா! பூசாரிக்கு நினைவு தப்பிடுச்சுங்க! திடீரென்று படுத்துவிட்டார். புலம்புறாருங்க! ஒரு குவாட்டரும் அரை பிளேட் மட்டன் பிரியாணியும் வேணும்கிறாருங்க! வாங்கிக் கொடுத்தா வாங்க மாட்டேனுங்கிறாருங்க! மகாலிங்கம் மகனை கொண்டுவரச் சொல்லு. இல்லையென்றால், சாரதா அம்மாவிடம் சொல்லுனு அதட்டுறாருங்க! நானும் அவர் கேட்டதை வாங்கி மகாலிங்கம் மகன் கொடுத்தாருனுதான் கொடுத்தேனுங்க! தூக்கி எறிந்து பாட்டிலை ஒடைச்சுப் போட்டுட்டாருங்க! சாரதா அம்மா கொடுத்தாங்கனும் கொடுத்தேனுங்க! பார்த்துக்கிட்டே இருக்கிறாருங்க! சாப்பிட மாட்டேன் என்கிறாருங்க. என்னை ஏமாத்தப் பார்க்கிறயானு... கெட்டகெட்ட வார்த்தைகளில் திட்டுறாருங்க” என்றார் அந்த மூதாட்டி அழுதபடி. சில வினாடிகளின் தயக்கத்திற்குப்பின் “இப்போது நான் என்ன செய்ய வேண்டும்” என்றார் சாரதா. “நீங்கள்தான் எங்கள் தெய்வம். நீங்கள் வந்துதான் என் புருஷனைக் காப்பாத்தணும்” என்றார் அய்யனார் கோவில் பூசாரி மாரிச்சாமியின் துணைவி. சத்தமில்லாமல் வந்து அமைதியாக சாரதாவின் பின் நின்றபடி அனைத்தையும் பார்த்துக்கொண்டிருந்தார்

ஜனார்த்தனன். "ஒரு குவாட்டரும் அரை பிளேட் மட்டன் பிரயாணியும்தானே! நான் போயி வாங்கிவிட்டு வருகிறேன், சாரதா. நானும் நீயும் பூசாரி வீட்டுக்குப் போயி, பூசாரியையும் பார்த்துவிட்டு, சாப்பிடச் சொல்லிக் கொடுத்துவிட்டு வருவோம். பாவம். போனாப் போகுது. இதோ சட்டையைப் போட்டுவிட்டு வருகிறேன்" என்று வீட்டிற்குள் நுழைந்தார் ஜனார்த்தனன்.

vasuaruntamil@gmail.com ■